**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP .No. 157/2019</u>**

**<u>நாள் : 10.06.2025</u>**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கோ.முனிரத்தினம் | மாவட்டம் | : | |
| தந்தை பெயர் | : | திரு. கோவிந்தராஜ் | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | தேசியம் | : | |

**முதல் விசாரணை**

1. நான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக 2016 முதல் 2019 வரை பணி புரிந்தேன். 2023 ஆண்டு பணி ஓய்வு பெற்று விட்டேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண் 505/2018 முதல் தகவல் அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன். 23.12.2018 மாலை வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று விசாரித்த போது விபத்தில் காயம் பட்ட சின்னராஜ் என்பவர் மேல் சிகிச்சைக்கு சென்று விட்டதாக தகவல் தெரிந்தது. பின்பு 24.12.2018 அன்று கிருஷ்ணகிரி அருண் தனியார் மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனைக்கு சென்றேன்.

2. அங்கு உள்நோயாளியாக இருந்த சின்னராஜ் என்பவரிடம் விபத்து சம்பந்தமான வாக்குமூலம் பெற்று அன்றே முற்பகல் 10 மணிக்கு நாட்றம்பள்ளி காவல்நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண் 505/2018, இ.த.ச. பிரிவுகள் 279, 337 அதன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அன்றைய தினமே 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பிரசாத், நந்தகுமார் ஆகிய இருவர் முன்னிலையில் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயாரித்தேன். பின்பு சாட்சிகள் சின்னராஜ், கல்பனா, சசிகுமார், பிரசாத், நந்தகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

3. பின்பு சம்பவத்தில் விபத்திற்குள்ளான TN 23 U 2145 பதிவு எண் கொண்ட TVS 50 இருசக்கர வாகனத்தையும், விபத்து ஏற்படுத்திய TN 23 BX 3845 பதிவு எண் கொண்ட இரண்டு வாகனங்களையும் கைப்பற்றி நாட்றம்பள்ளி காவல்நிலையத்தில் பாதுகாப்பில் வைத்தேன். பின்பு 04.01.2019 அன்று விபத்திற்குள்ளான TN 23 U 2145 என்ற வாகனத்தையும், 08.01.2019 அன்று TN 23 BX 3845 TVS JIVA என்ற விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும், விபத்திற்கான காரணம் அறிய வேண்டி வேண்டுதல் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கதிர்வேல் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

4. பின்பு 23.12.2018 இரவு முதல் 09.01.2019 ஆம் தேதி வரை மேற்படி கிருஷ்ணகிரி அருண் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சின்னராஜ் என்பவர் மேல் சிகிச்சைக்காக சேலம் SKS தனியார் மருத்துவமனையில் 09.01.2019 அன்று சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டவர் 10.01.2019 ஆம் தேதி காலை 6.15 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைத்த தகவலை பெற்று சட்ட பிரிவுகள் இ.த.ச. பிரிவுகள் 279, 337 மற்றும் 304-A மறுதல் செய்து நாட்றம்பள்ளி காவல் ஆய்வாளரிடம் சமர்பித்தேன்.

5. எனக்கு பின்பு புலன் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி யார் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் புவியரசன் என்பவர் மீது தாக்கல் செய்தார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 தான் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.12 சான்று ஆவணம் நான் தயாரித்த மாதிரி வரைப்படம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆகிய இரண்டு ஆவணங்கள் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 புலன் விசாரணை அதிகாரி திரு.பி.சாந்தலிங்கம் சமர்பித்த இறுதி அறிக்கை.

6. என்னுடைய முதல் கட்ட புலன் விசாரணையில் TN 23 U 2145 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை சின்னராஜ் என்பவர் ஓட்டிச் சென்றதாகவும், பின்னால் அவர் மகள் கல்பனா அமர்ந்து சென்ற போது விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்தது. TN 23 BX 3845 பதிவு எண் கொண்ட TVS JIVA வாகனத்தை அதன் ஓட்டுநர் புவியரசன் அதிவேகமாக ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியதாக தெரிய வந்தது. கல்பனாவின் காயச்சான்றை SPARSH மருத்துவமனை சென்று பெறவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்பதால் காயச் சான்று பெறவில்லை.

7. இந்த விபத்து சம்பந்தமாக புவியரசனோ அல்லது வேறு யாரோ எங்கள் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை ஏதும் எதிர்மனுதாரர்களால் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. விபத்து வேறு வகையில் ஏற்பட்டதாக ஏதும் தெரிய வந்ததா என்றால் இல்லை.

**எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கல்பனாவை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தேன். கல்பனாவை 24.12.2018 அன்று விசாரித்தேன். எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் கிருஷ்ணகிரியில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். மருத்துவமனையில் அவருடைய தந்தைவுடன் இருந்த போது விசாரித்தேன். வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற கல்பனா செல்லவில்லை என்றால் சரிதான்.

2. சின்னராஜ் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தான் ஓட்டிச் சென்ற வாகனம் என தெரிவித்தாரா என்றால் இல்லை. சின்னராஜ் தான் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்று என்னுடைய புலன் விசாரணையில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணையில் சின்னராஜ் வாகனத்தை ஓட்டிச் சென்ற போது விபத்து ஏற்பட்டதாக தெரியவரவில்லை என்றால் சரியல்ல.

3. TVS 50 வாகனத்தின் பின்புறமாக எந்த வாகனமும் மோதவில்லை என்றும், அதனால் தான் ம.சா.ஆ.5 TVS 50 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் பின்புறம் சேதம் அடைந்தது என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.12 மாதிரி வரைப்படத்தில் நெடுஞ்சாலையின் இடதுபுறம் விபத்து நடந்ததாக பதிவு செய்துள்ளேன். வலதுபுறம் விபத்து நடந்ததாக தான் பதிவு செய்துள்ளேன் என்றும், ஆனால் அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட வழக்கில் நான் முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.